


- வாழ்வோம்

மக்கள் சக்தி எழுந்திடும்!

"தேர்தல் ஆணையத்துக்கு எதிரான இளைஞர்களின் போராட்டத்திற்கு ஒன்றிய அரசு பணிந்தே தீர வேண்டும்; வேறு வழியில்லை. இந்த சக்தியை இனிமேல் முடக்கிப்போட முடியாது என்ற உண்மையைப் பேரரசர், சிற்றரசர்களின் ஆதரவாளர்கள் உணர்ந்துகொண்டாக வேண்டும்" என்று முகநூலில் பதிவிட்டுள்ளார், எழுத்தாளர் களந்தை பீர் முகமது. அவரது பதிவில்...

"எதற்கும் ஒரு கால அளவு உண்டு. ஒரு போராட்டம் தன் கால அளவை நீட்டித்துக்கொண்டு போனால், அது வெற்றியடையாமல் தன் பணியை முடிக்காது. தன் காலமும் அதிகாரமும் முடிவடைந்துவிட்டதைப் பேரரசர் இன்னமும் புரிந்துகொள்ள மறுக்கிறார். அவரால் அந்த யதார்த்தத்தை ஜீரணிக்கவே முடியவில்லை.

சி.ஜே.பி. (CJP) தொடங்கப்பட்டபோது... அனைவரையும் பாகிஸ்தானியர் என்று அடையாளப்படுத்தி, நாட்டையும் நாட்டு மக்களையும் ஏமாற்றிக்கொண்டிருந்தார் பேரரசர். அதனைப் பலரும் நம்பும் படியாகப் பல விதமான தரவுகளைக் கொடுத்து ஏமாற்ற முயற்சி செய்தார். அப்படியானால், அந்தப் பாகிஸ்தானியர்களும் பங்களாதேசிகளும் இந்திய எல்லையை ஊடுருவி வந்துதான் ஜந்தர்மந்தரிலும் மும்பையிலும் பெங்களூருவிலும் குழுமியிருக்கிறார்களா?

இந்தக் கேள்விக்கு, 'ஆம்' என்று சொன்னாலும் 'இல்லை'யென்று சொன்னாலும் பேரரசரின் ஆட்சித்திறம் நொறுங்கிச் சின்னாபின்னமாகிவிட்டது என்றுதானே பொருள்? அவர் அங்கிட்டும் போக முடியாது, இங்கிட்டும் வர முடியாது. ஆதலால், கதையை மாற்றிப் பேசுகிறார் பேரரசர். போராடும் தாயகத்து இளைஞர்களுக்கு, அந்நிய நிதியுதவி வந்துகொண்டிருப்பதாகக் கதைகட்டுகிறார். அதையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்க முடியாத அளவில்தான் பேரரசரும் சிற்றரசரும் செயலிழந்துகிடக்கிறார்கள் போலும்.

போராட்டத் தலைவர்களை விமானத்தின் உள்ளேயே சென்று கைதுசெய்யும் அளவுக்குப் பேரரசரின் உள் நடுக்கம் பெருகியிருப்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. எனவே, மாற்றுக் கதையாடல்களை உருவாக்கி நேரக்கொலைகள் புரிந்திடாமல், ஞானேஷ்குமாரைக் கழற்றிவிட்டு, மக்களின் முன்னே மண்டியிடுவதற்கு நம் அரசர்கள் முன்வர வேண்டும்.

வராவிட்டால்..? பேரரசருக்குப் பிராணவாயுவைச் செலுத்தும் அந்தத் தொப்புள்கொடியை மக்கள் சக்தியே துண்டித்துவிடும். கௌரவம்பார்த்து, உள்ளதையும் இழந்து விடாதீரும் பேரரசே!

வரலாற்றுச் சாட்சியம்!



கௌதம் ராஜ்

பதிப்பகம் 135

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

திராவிடர் கழகத்தில் இருந்து விலகி, 1949-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டபோது, அன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர்கள், 'நாடகங்கள்' மற்றும் 'நூல்கள்' மூலம் தி.மு.கழகத்தின் கருத்துகள் வெகுமக்களைச் சென்றடைவதை விரும்பவில்லை. ஓராண்டுக்குள் கழகம் அடைந்து வந்த வளர்ச்சி, அவர்களை அலறச்செய்தது.

இந்த ஓராண்டுக்குள் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்களின் படைப்புகள் 153-ஏ சட்டப் பிரிவின்கீழ் வழக்குப் பதியப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டன. பேரறிஞர் அண்ணாவின் 'விடுதலைப் போர்', 'ஆரிய மாயை' ஏ.வி.பி. ஆசைத்தம்பி-யின் 'காந்தியார் சாந்தியடைய' ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இதே காலகட்டத்தில் தந்தை பெரியாரின் 'பொன் மொழிகள்' மீதான வழக்கும் தொடுக்கப்பட்டு தடை செய்யப்பட்டது.

திருச்சி மத்திய சிறையில், பேரறிஞர் அண்ணா அறை எண் 12-லும், தந்தை பெரியார் 13-லும் அடைக்கப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது, மேற்சொன்ன நூல்கள்தான். தி.க-தி.மு.க. பிரிவுக்குப் பிறகு, இரண்டு தலைவர்களையும் இணைத்த நிகழ்விது.

தந்தை பெரியார் அவர்களது அனுமதி மற்றும் அங்கீகாரத்துடன், 1949-இல் திருச்சி 'திராவிடமணி பதிப்பக' உரிமையாளர் முத்து அவர்களது அரிய முயற்சியால் வெளியிடப்பட்ட நூல், 'பெரியாரின் பொன்மொழிகள்'. அதே ஆண்டு தடைசெய்யப்பட்டு, பின் பெரியாரின் நூற்றாண்டை ஒட்டி 1979-ஆம் ஆண்டு, அந்தத் தடை நீக்கப்பட்டது. திராவிடர் கழக வெளியீடாக இன்றைக்கும் இந்நூல் படிக்கக் கிடைக்கிறது.

அரசியல், மதம், கடவுள், சமுதாயம், இயக்கம், காங்கிரஸ், ஆட்சி, மொழி, தொழிலாளி, திருக்குறள், திராவிடர் கழகம், தீண்டாமை, பகுத்தறிவு, சீர்திருத்தம், பொருளாதாரம், ஆரியம் ஆகிய தலைப்புகளின் கீழ், பெரியார் 1949-ஆம் ஆண்டு வரை ஆற்றிய உரைகளில் இருந்தும் எழுதிய படைப்புகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொன்மொழிகள், இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூல் மீதான வழக்கு விசாரணை நடைபெற்றபோது, தந்தை பெரியார் சமர்ப்பித்த எழுத்து வடிவிலான வாக்குமூலம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அதில், "எவ்வளவு பழைமையானதாயிருந்தாலும், என்ன வரலாற்றைப் பெற்றிருந்தாலும், உண்மையை எடுத்துக்காட்ட வேண்டும். சமுதாயத்திற் கேற்றதல்லாத சில முறைகள் நீக்கப்பட வேண்டுமானால், அவற்றைப் பற்றி மக்கள் யாவரும் உணருமாறு எடுத்து விளக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஏதாவது சீர்திருத்தம் செய்ய முடியும். உள்ளதை உள்ளவாறு எடுத்துக் காட்டப்படாவிட்டால், சமுதாயத்தில் எத்தகைய சீர்திருத்தமும் செய்ய முடியாது" என்பதை மிகத் தீர்மானமாக நீதிமன்றத்தில் வெளிப்படுத்தி இருந்தார். மேலும், அபராதம் கட்டவும் மறுப்பு தெரிவித்தார். இதை காரணமாகக் கொண்டு, கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒரே சிறையில் அடைக்கப்பட்ட பெரியாரும் அண்ணாவும் 10 நாள் சிறைவாசத்திற்குப் பிறகு ஒரே நாளில் விடுவிக்கப்பட்டனர். ஒரே வாகனத்தில் பயணிக்கும் வாய்ப்பும் அமைந்தது. தந்தை பெரியார் வேதாசலம் இல்லத்திலும், அண்ணா அவர்கள், திருச்சி சாம்பு இல்லத்திலும் இறங்கிக் கொண்டனர். அப்போது, இருவரும் சேர்ந்து விடுதலையாகும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் வெளியிடப்படவில்லை என்றாலும், அதற்கான வரலாற்றுச் சாட்சியங்களாக 'பெரியாரின் பொன்மொழிகள்' நூலும் அண்ணாவின் 'ஆரிய மாயை' நூலும் திகழ்கின்றன.

...வாசிப்போம்.

திராவிட இயக்கம் ஆலமரம்



மு.சந்தோஷ்குமார், சென்னை.

திரையிலும் உரையிலும், பிரச்சார முறையிலும் 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' என்கிற வகையில், நம்மிடம் குறை இருப்பதை 'திராவிடன்' ஒப்புக்கொள்வாரா?

இதை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்வதில், திராவிடனுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. 1967-ஆம் ஆண்டு வரை தி.மு.க.வின் பாதை கொள்கைவழி எதிர்ப்பு அரசியலாக இருந்தது. 1972-ஆம் ஆண்டு முதல், திட்டமிட்டு பிளக்கப்பட்டு உருவான 'போலித் திராவிடத்தை' எதிர்கொள்ளவேண்டிய சூழல் அமைந்துவிட்டது. 1991-ஆம் ஆண்டுக்குப் பிறகு, திராவிடத்தின் பெயரால் திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு நேரெதிராகச் செயல்பட்ட கூட்டத்தை, எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. நடுநடுவே பல வகையான அரசியல் கொசுக்கள் நொய்..நொய்.. என்று தொல்லை கொடுப்பது வழக்கம். அதனால், திராவிட இயக்கத்தில், குறிப்பாக தி.மு.க.வில், நடுவில் ஒரு தலைமுறையிடம் கலை - இலக்கிய - படைப்பாற்றல் என்கிற பக்கங்களைக் காணவில்லை. அதை மீட்டெடுக்கும் வகையில், 'பாசறைப் பக்கம்', 'இளம் பேச்சாளர்கள்', 'அறிவுத் திருவிழா' மூலம் கலைப் படைப்பாளர்களைக் கண்டறிந்து, ஊக்கப்படுத்திவருகிறார், கழகத்தின் இளம் தலைவரான இளைஞர் அணிச் செயலாளர். இது இன்னும் வேகமாகவும் ஆழமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

திராவிடன் பதில்கள் 04

ராகுல் வெங்கட்ராமன், கும்பகோணம்.

தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள்மீது, த.வெ.க. அரசு ஊழல் வழக்குகளைத் தொடர்கிறதே, தப்பிக்க முடியுமா?

அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கத்துடன், தி.மு.க. மீது பொய்யாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நீதிமன்றங்கள் வாயிலாக எதிர்க்கொண்டு, சட்டப்படி போராடி, விடுதலைத் தீர்ப்புகளைப் பெற்றதுதான் தி.மு.க.வின் வரலாறு. கரூரில் 41 உயிர்ப்பலிகள் ஏற்பட்டபோது, அந்த இடத்திலிருந்து தப்பித்து ஓடி, மாதக்கணக்கில் தலைமறைவாக இருந்தவர்கள் போல தி.மு.க. எப்போதும் இருந்ததில்லை. தி.மு.க. மீது பொய்யான குற்றம் சாட்டுபவர்களின் உண்மையான குற்றங்கள் மிக விரைவில் நீதிமன்றத்தில் வெளிப்படுவது வழக்கம். எம்.ஜி.ஆர். ஆட்சியில், திருச்செந்தூர் கோயில் ஊழல்-அறநிலையத் துறை அதிகாரி கொலை, ஜெயலலிதா ஆட்சியில் சொத்துக்குவிப்பு வழக்கு-ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது ஆசிட் வீச்சு. இப்போது, த.வெ.க. தலைவர் விஜய் கொடைக்கானலில் அரசு புறம்போக்கு நிலத்தைத் தன் பெயரில் பதிவுசெய்திருக்கும் விவகாரம், நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறியிருக்கிறது.

தூயா, தேவதானப்பட்டி.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் ஒன்றிலாவது, தி.மு.க. வெற்றி பெற்றிருக்கலாமே என்று மனம் ஏங்குகிறதே?

ஏக்கத்தைத் தவிருங்கள். சட்டமன்றத் தேர்தலில் உடன்பிறப்புகள் எதிர்பாராத ஒரு தோல்விக்குப் பிறகு வந்த இடைத்தேர்தல் களங்கள் இவை. தி.மு.க.வின் தோழமைக் கட்சிகள் பலவும் பதவி சுகத்திற்காக அணி தாவிய அணில்களான நிலையில், தி.மு.க. தன் சொந்த பலத்தில் எதிர்கொண்ட இடைத்தேர்தல். கவர்ச்சி அரசியலுக்கு மயங்கி, மக்கள் வாக்களித்துவிடுவார்கள் என்ற மமதையில் இருந்த விஜய்யை, இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா இரண்டு நாட்கள் தெருத் தெருவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டிய நெருக்கடிக்குள்ளாக்கியது, தி.மு.க.வின் களப்பணி. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு அமைச்சரவையும் இரண்டு தொகுதிகளிலும் தான் முகாமிட்டிருந்தன. காவல் துறையினருக்கு தமிழ்நாடு என்றால், தாராபுரமும் மதுராந்தகமும்தான் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. இத்தனை படை - பட்டாளத்தைக் கூட்டிவைத்தும், திக்கித் திணறித்தான் வெற்றிபெற்றிருக்கிறது ஆளுங்கட்சியான த.வெ.க. அதே நேரத்தில், தி.மு.க. தனது வாக்குவங்கி சிதறாமல், சொந்த பலத்தை நிரூபித்து, இரண்டு தொகுதிகளிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. கழகத் தலைவர் சொன்னது போல, தி.மு.க.வுக்குத் தோல்வியிலும் வெற்றி. த.வெ.க.வுக்கு வெற்றியிலும் தோல்வி.

(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண் - 82204-51520)

ஃப்ளாஷ்பேக்



மரு.கோவி தூயவன்



தலைவர் இல்லத்தில், அண்ணன் திருமணம்!

2017-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ஆம் தேதியன்று, மதிப்பிற்குரிய நம் கழகத் தலைவர் அவர்களின் இல்லத்தில், என் அண்ணன் கோவி.அழகிரி - தீபிகா ஆகியோரின் திருமணத்தைக் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில், தலைவரும் திருமதி. துர்கா அம்மாவும் நடத்திவைத்து வாழ்த்தினர். அப்போது, மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணன் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, அண்ணன் அணைக்கட்டு ஏ.பி.நந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர். அந்த மகிழ்ச்சியான தருணத்தில், தலைவர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

- மரு.கோவி தூயவன்,
மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்,
கெம்மங்குப்பம், கே.வி.குப்பம் ஒன்றியம், வேலூர் வடக்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900